தினமலர் 01.09.2025



அரவக்குறிச்சி தொகுதி வளர்ச்சிக்காக ரூ.44.80 லட்சத்திற்கான காசோலையை எம்எல்ஏ இளங்கோவிடம் காகித ஆலை நிறுவன முதன்மை பொது மேலாளர் (மனித வளம்) கலைச்செல்வன் வழங்கினார்.

# அரவக்குறிச்சி தொகுதி வளர்ச்சிக்கு காகிதஆலை ரூ.44 லட்சம் வழங்கல்

**வேலாயுதம்பாளையம்:** அரவக்குறிச்சி தொகுதி வளர்ச்சிக்காக தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம் சார்பில் ரூ.44 லட்சத்து 80 ஆயிரத்திற்கான காசோலை வழங்கப்பட்டது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம் தனது சமூக மேம்பாட்டு திட்டத்தின் கீழ் காகித ஆலையைச் சுற்றி அமைந்துள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி மற்றும் திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்பு பாளையம் நஞ்சை புகழூர் ஆகிய ஊராட்சி பகுதிகளின் கல்வி வளர்ச்சிக்கும், உட்கட்டமைப்பை மேம்படுத்திடவும் பல்வேறு திட்டங்கள் மற்றும் உதவிகளை செய்து வருகிறது.

அந்த வகையில் அரவக்குறிச்சி தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் உயர்மின் கோபுர விளக்குகள் அமைப்பதற்காக ரூ.44 லட்சத்து 80 ஆயிரம் நிதி வழங்கியுள்ளது. அதற்கான காசோலையை அரவக்குறிச்சி எம்எல்ஏ இளங்கோவிடம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவன முதன்மை பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் வழங்கினார்.

தினமணி 01.09.2025

# அரவக்குறிச்சியில் உயர்மின் கோபுரங்கள் அமைக்க டிஎன்பிஎல் ரூ. 44.80 லட்சம் நிதியுதவி



அரவக்குறிச்சியில் உயர் மின்கோபுரம் அமைக்க நிதியுதவிக்கான காசோலையை அரவக்குறிச்சி சட்டப்பேரவை உறுப்பினர் ஆர். இளங்கோவிடம் சனிக்கிழமை வழங்கிய டிஎன்பிஎல் ஆலையின் முதன்மை பொதுமேலாளர் (மனிதவளம்) கே. கலைச் செல்வன்.

கரூர், ஆக. 31: அரவக்குறிச்சி சட்டப் பேரவைத் தொகுதியில் உயர் மின் கோபுரங்கள் அமைக்க டிஎன்பிஎல் சார்பில் ரூ. 44.80 லட்சம் நிதியுதவி சனிக்கிழமை வழங்கப்பட்டது.

கரூர் மாவட்டம், புகழூர் காகித ஆலையின் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அரவக்குறிச்சி சட்டப்பேரவைத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உயர் மின் கோபுர விளக்குகள் அமைக்க நிதியுதவி வழங்கும் நிகழ்ச்சி ஆலையில் சனிக்கிழமை நடைபெற்றது.

இதில், உயர்மின் கோபுரங்கள் அமைக்க ரூ.44.80 லட்சத்திற்கான காசோலையை காகித ஆலையின் முதன்மை பொது மேலாளர் (மனித வளம்) கே. கலைச்செல்வன், அரவக்குறிச்சி சட்டப்பேரவை உறுப்பினர் ஆர். இளங்கோவிடம் வழங்கினார். நிகழ்ச்சியில் ஆலை அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினகரன் 31.08.2025

தமிழ்நாடு காகித ஆலை சார்பில்

# அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி வளர்ச்சிக்கு ரூ.44.80 லட்சம் நிதி



வேலாயுதம்பாளையம், ஆக.31: அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதி வளர்ச்சிக்கு டிஎன்பிஎல் சார்பில் ரூ.44.80 லட்சம் நிதி வழங்கப்பட்டது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் காகித ஆலையைச் சுற்றி அமைந்துள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி மற்றும் திருக்காடுதுறை. வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம், நஞ்சை, புகளூர் ஆகிய ஊராட்சி பகுதிகளின் கல்வி வளர்ச்சிக்கும், உட்கட்டமைப்பினை மேம்படுத்திட பல்வேறு திட்டங்கள் மற்றும் உதவிகளைச் செய்து வருகிறது.

அதன் படி, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உயர் மின் கோபுர விளக்குகள் அமைப்பதற்காக ரூ.44,80,000ற்கான காசோலையினை டிஎன்பிஎல் நிறுவனத்தின் முதன்மை பொது மேலாளர் (மனிதவளம்) கலைச் செல்வன், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் இளங்கோ இளங்கோவிடம் வழங்கினார்.

காலைக்கதிர் 31.08.2025

# உயர்மின் கோபுர விளக்கு அமைக்க டி.என்.பி.எல்., நிதி வழங்கல்

கரூர், ஆக. 31

புகளூர், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமூக மேம்பாட்டு திட்டத்தின் கீழ், காகித ஆலையை சுற்றி அமைந்துள்ள புகளூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி டவுன் பஞ்., திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம், நஞ்சை புகளூர் ஆகிய பஞ்., பகுதிகளின் கல்வி வளர்ச்சிக்கும், உட்கட்டமைப்பை மேம்படுத்திட பல்வேறு திட்டங்கள் மற்றும் உதவிகளை செய்து வருகிறது.

இந்நிலையில், அரவக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட பகுதிகளில், உயர் மின் கோபுர விளக்குகள் அமைப்பதற்காக, 44.80 லட்சம் ரூபாய்க்கான காசோலையை, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் முதன்மை பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், அரவக்குறிச்சி எம்.எல்.ஏ., இளங்கோவிடம் வழங்கினார்.



■ எம்.எல்.ஏ., இளங்கோவிடம், உயர் மின் கோபுர விளக்குகள் அமைப்பதற்காக, 44.80 லட்சம் ரூபாய்க்கான காசோலையை, புகழூர் டி.என்.பி.எல்., நிறுவனத்தின் முதன்மை பொது மேலாளர் கலைச்செல்வன் வழங்கினார்.

மாலை மலர் 31.08.2025

### காகிதபுரம் டி.என்.பி.எல். நிறுவனம் சார்பில்

# அரவக்குறிச்சியில் உயர் மின்கோபுர விளக்குகள் அமைக்க ரூ.44.80 லட்சம் நிதி வழங்கல்

வேலாயுதம்பாளையம், ஆக.31—

டி.என்.பி.எல். நிறுவனம் சார்பில் அரவக்குறிச்சியில் உயர் மின்கோபுர விளக்குகள் அமைக்க ரூ.44.80 லட்சம் நிதி வழங்கப்பட்டது.

கரூர் மாவட்டம் புகளூர் காகிதபுரம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் காகித ஆலையைச் சுற்றி அமைந்து உள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி மற்றும் திருக்கா டுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம் ,நஞ்சை புகளூர் ஆகிய ஊராட்சி பகுதிகளின் கல்வி வளர்ச்சிக்கும், உட்கட்டமை ப்பினை மேம்படுத்திட பல்வேறு திட்டங்கள் மற்றும் உதவிகளைச் செய்து வருகிறது.

அரவக்குறிச்சி சட்ட மன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உயர் மின் கோபுர விளக்குகள் அமை ப்பதற்காக ரூ.44.80 வட்சத்தி ற்கான காசோலை யை தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் முதன்மை பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் அரவக்குறிச்சி எம்.எல்.ஏ. இளங்கோ விடம் வழங்கினார்.



உயர் மின் கோபுர விளக்குகள் அமைப்பதற்காக ரூ.44.80 லட்சத்திற்கான காசோலையை காகிதபுரம் டி.என்.பி.எல். நிறுவனத்தின் முதன்மை பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் அரவக்குறிச்சி எம்.எல்.ஏ. இளங்கோவிடம் வழங்கிய போது எடுத்த படம்.